# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10

மலர் 8 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 101) 1971 பெப்ரவரி | இதழ் 5



**அறிவிப்பு**

காந்திய - சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம்


# காந்தி அவதார புருஷரா?

## வினோபா விடை அளிக்கிறார்

காந்திஜியைப் பற்றி அடிக்கடி நினைவு கூருகிறோம். அவரது இடையறாத முயற்சிகள் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக அவரது ஆற்றல் வளர்ந்தது. அவர் மகா முனிவரைப் போன்று. திடீரென்று செயற்கரிய செயல் ஒன்றைச் செய்து விடவில்லை.



கபிலர் தாயாருக்கு உபதேசிக்கத் தொடங்கினர். இது மாபெரும் சித்தி. ஏன் சங்கராச்சாரியாரைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். சுமார் எட்டு வயதிலேயே வேதங்களைப் படித்து விட்டு பிரசாரம் செய்யப் புறப்பட்டுவிட்டார்.

ஆண்டவன் கிருபையால் இவர்களின் வரிசையில் காந்திஜிசேரவில்லை. இவர்களுடைய வரிசையில் காந்திஜியும் சேர்ந்திருந்தால் அவர் நமக்குப் பயன்பட்டிருக்க மாட்டார். ஏனெனில் அந்தநிலைமையில் காந்திஜீயின் முன்சென்று கைகூப்பி, ''ஐயா நீங்கள் அவதாரபுருஷர். உங்கள் இடத்தில் நீங்கள் இருங்கள். சாதாரண மக்களாகிய நாங்கள் எங்கள் இடத்திலேயே இருக்கிறோம்'' என்று கூறியிருப்போம். நாம் அவரைப்பின்பற்றி இருக்கமுடியாது. மேலும் ''நீங்கள் சூரியன், மகான், ஆகையால் நாங்கள் பூமிமீதே இருக்கிறோம். உங்களை வேண்டுமானால் கைகூப்பிவணங்குவோமே அல்லாது உங்கள் பின் எங்களால் வரஇயலாது. உங்கள் வரிசையேதனி. யட்சர், கின்னரர், கந்தர்வர்கள்வரிசையில் உங்களையும் வைக்கிறோம்நாங்கள்சாதாரணமனிதர்களே'' என்று கூறுவோம். பிறப்பில் காந்தியடிகள் சாதாரண மானவரே என்பதை முதலில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி அவர் அவதாரபுருஷர் என்று எண்ணத் தொடங்குவோமாயின் விஷயமே ஆபத்தாக இருக்கும். அவதார உருவத்திற்கும் தேவை இருக்கிறது. மனித உருவில் ஆண்டவன் வந்துவிட்டான் என்று கருதி உபாசனையின் மூலம் பக்தி செலுத்துவதற்கு அது இலாபகரமாகவே இருக்கும். ஆனால் இப்பொழுது மனிதர்கள்தான் தேவை. எப்போதாவது மகாத்மாவையும் அவதாரமாக்கி இருந்தால், அவரது பெயரைக்கூறி நினைப்பதைத்தவிர அவரால் நமக்கு எப்பயனும் ஏற்படாது. ராமர், கிருஷ்ணரைத்தவிர்த்து மூன்றாவது அவதாரம் நமக்குத் தேவை இல்லை.

ஆகையால் மனித உருவில் காந்திஜியை நிரந்தரமாக வைத்திருப்போம். அவரை வைத்து தனிஜாதியை உருவாக்கிவிட வேண்டாம். நாமும் சிந்திப்போம். அவர் எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருந்தார். மாற்றிக் கொண்டே இருந்தார். ''நான் முன் கூறிய ஏதாவது ஒருவாக்கியத்துடன் பின்னர் நான் கூறுவதுமுரண்பட்டுத் தெரிந்தால் முன்னதை விட்டு விட்டு பின்னதையே பிரமாணமாக ஏற்று முன்னதை தவறு என்று கருதுங்கள். ஏனெனில் நான் முன்னேக்கிச் சென்று கொண்டிருக்கிறேன். பழைய வார்த்தைகள் பக்குவமடைவதற்கு முன்னர் உள்ளது என்று நினைத்து விலக்கிவிடுங்கள்'' என்று காந்திஜி கூறுவது வழக்கம்.

ஆகவே காந்திஜியை நம்மைப் போன்ற மனிதராகவே நினைத்து அவர் வழி நடக்க முயல்வோமாக!

நன்றி: கிராமராஜ்யம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 2 5 4
கிளிநொச்சி
காந்தி ஆண்டு 101
1971 பெப்ரவரி

# அன்பு

திரு. விமலா தக்கர் என்பார் அணமைக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்து பல சொற் பொழிவு ஆற்றிச் சென்றார். இவர் வினோபாஜியுடன் சேர்ந்து பூதான இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவர். பின்னர் திரு. கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளின் விளைவாக, அவ்வியக்கத்திலிருந்து விலகி இப்பொழுது உலக நாடுகளெங்கும் தம் புதிய முறைக் கருத்துக்களை எடுத்தோதி வருகின்றார். இவரின் கருத்தினில் முக்கியமான பகுதியை நாம் உளங்கொள்வது சர்வோதய இயகத்திற்கு நற்பலன் தருவதாகும்.

இவருடைய போதனைகளிலும் சரி கிருஷ்ணமூர்த்தியின் போதனைகளிலும் சரி சர்வோதய இயக்கத்திற்கு ஆதாரமான அமிசமென்ன என்பது தான் நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியது.

நாம் ஏன் மற்றை எல்லோருடைய எழுச்சிக்காகவும் உழைக்க வேண்டும்? அதனால் நமக்கு, மற்றையவருக்கு, உலகத்திற்குக் கிடைக்கும் பயன் யாது? உலகில் துன்பமும் துயரும் பெருகி மக்கள் நொந்துதவிப்பதை நாம் நேரில் காண்கிறோம். துனபம் கூடாது இன்பம் தான் மனிதனுக்குஇயல்பாக அமைந்த ஒழுக்க நெறி; அதனால் எல்லோரும் இன்புற்றிருக்க இறைவனை வேண்டுவதும் பாடுபடுவதும் நம் கடமையாகும் என்று நாம்எண்ணுகிறோம். இந்த எண்ணம் பகுத்தறிவினால் நமக்குத் தோன்றும் ஒரு கருத்துப்போக்கு.

ஆனால் இந்தப் பகுத்தறிவு நமக்குப் புத்தியையும் ஒரு செயல் முறையையும் தருமே ஒழிய முழுஅறிவையும் நமக்குத் தராது. பகுப்பு முறை ஆராய்ச்சி ஒரு பாகுபட்டபிராமணத்திற்கு நம்மை இட்டுச்செல்லும். இப்பிரமாணமும் ஒரு காலத்தில் ஒரு தேசத்தில் நிலவும் கொள்கைகள் இலட்சியங்களுக்கு ஏற்றவகையில் மாறுபடும்.

இதனால் மக்களிடையே எழும் பிரச்கினைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண முடியாது. ஆகவே பிரச்சினைகளை உலக நோக்குக் கொண்டு தீர்ப்பதற்கும், எல்லா மக்களுக்கும்எல்லாக் காலத்திலும் பொருந்தும் வகையில் தீர்ப்பதற்கும் வழியாது?

பிரச்சினைகளை நாம் பகுதிப்பட்ட, பின்னப் பட்ட அளவுகோல்களைக் கொண்டு அளந்துபாராது மனிதனின் முழு ஆற்றலையும் கொண்டு அளந்து பார்க்க வேண்டும். அறிவு மூளையின் வேலைப்பாடு. மனித ஆற்றலின் ஒரு சிறு பகுதியே பகுத்தறிவு. மனத்தின்கைப்பிடி பகுத்தறிவு. ஆயின் மனிதனின்முழு ஆன்மாவையும் அடக்கி முழுஆற்றலையும் எழுப்பித் தொழிற்படச் செய்யக் கூடியது அன்பு ஒன்றே.

அன்பு ஒன்றே மனிதனின் புத்தியையும், உளஆற்றலையும் கடந்துஅவன் உயிர் உடல் இரண்டையும் இணைத்து ஒன்று பெற முழுமையில் இயக்கக் கூடியது. அன்பு ஒன்றினால் தான் மற்றைய ஒரு மனிதனை நாம் உணர முடியும். அஃதல்லாமலும் அறிவினால் அளந்து இசையவைக்க முடியாத ஒருவனை அன்புஒன்றினால் இசைவிக்கலாம். பகுத்தறிவினால் உணர முடியாத ஒரு பிரச்சினையை அன்பொன்றினாலேயே செவ்விதில் அளந்து தீர்க்கலாம். அன்பு ஒன்றினாலேயே அணுகப் பட்டோனுக்கும் இடையூறின்றிப் பிரச்சினையைத் தீர்க்கலாம். மனிதனின் மற்றை எல்லாக் கருவிகளையும் விட அன்பு ஒன்றே அன்பு உடையோனையும் அன்புக்குப் பாத்திரமானவனையும் மாசற்றவராக்கி நற்செயலில் தூண்டிவிடக் கூடியது. அன்பின் வழியது உயிர்நிலை.

எனவே உலகில் எழும் எல்லாப் பிரச்சினைகளையும் அன்பின் கண் கொண்டு பார்க்கும் பொழுது நமக்குக் கட்சிப்பிளவு, கோட்பாட்டுப் பிளவு தோன்றாது; நம்முடையஇலட்சியத்தை நம்முடையசமயத்தை, நம்முடைய அரசியல்நோக்கைமற்றையன் கொண்டவன் அதனால் நமக்கு அவன் இனியன். கொள்ளாதவன், அதனால் பகைவன் என்ற எண்ணம் நமக்குத் தோன்றாது. நாமும் ஒரு பிரச்சினையில் கெட்டித்தனமாகப் புத்திசாலித் தனமாக ஈடுபடாமல், உயிரே கலந்த முறையில் ஈடுபடுவோம்.

இந்த ஒரு வழியினால் தான் நாம் சர்வோதயத்தில் ஈடுபடலாம். அன்பு ஒன்றின் அடிப்படையில் தான் சர்வோதயத்தைக் கட்டி எழுப்பலாம். அன்பும் மனித அன்பாக மாற வேண்டும். அது, மொழி, இன, சமய நாட்டு அன்பாக உடைந்தசிதறுண்ட அன்பாக, இருக்கக் கூடாது. சர்வோதயத்தில் ஆணித்தரமாக நின்று உழைக்கக் கூடியது அலுப்பு ஒன்றுதான்.

திரு. கிருஷ்ணமூர்த்தி, விமலாதக்கர் போன்றவர்கள் அன்புநெறியை மனிதகுல முன்னேற்றத்திற்குப் பொதுவான ஒரு நெறியாகக் கூறுகின்றனர். ஆயின் கொள்கையளவில் பிளவு படாத சர்வோதயப் பணியில் ஈடுபட்டவர்க்கு "அன்பு நெறியை" விடச் சிறந்த மார்க்கம்கிடையாது

சர்வோதயப்பணியில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் சதா அன்பின் வழியிலேயே சகல காரியங்களையும் செய்யப் பழகிக்கொள்ளல்வேண்டும். செய்வதை அன்பினால் செய்கிறோமா? அகம்பாவத்தினால் அபிமானத்தால் செய்கிறோமா எனறுபார்க்கவேண்டும். பிள்ளைகட்குச் செய்யும் நன்மையும் அன்பினால் விளைந்தாலன்றி அபிமானத்தால் விளைந்தால்பயனளியாது. -இ. இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதய பயிற்சி முகாம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் தமிழ் நாடு சர்வோதய சங்கத்தின் ஆதரவோடு இலங்கை இளைஞருக்கு இந்தியாவில் தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டத்தை வெளியிட்ட போது இலங்கையிலுள்ள சகல தேசிய தினப் பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்துப்பிரசுரித்தன. இதன் பயனை நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பயிற்சிபெற விண்ணப்பித்தனர்.

இந்தியாவில் பயிற்சி பெறுவதற்கு முன்னோடியாக காந்திசேவா சங்க ஸ்தாபனங்களான உருத்திரபுரம்-காந்தி நிலையம், இரத்மலானை-சர்வோதய நிகேதனம் ஆகியவைகளில் ஓர் ஆண்டு சேவை செய்ய வேண்டுமென விண்ணப்பகாரர்களுக்குஅறிவித்தோம் ஐம்பது பேர் சம்மதம் தெரிவித்தனர்.

பயிற்சி பெறும் இளைஞர்களைத் தெரிவு செய்யும் நோக்கமாக பெப்பிரவரி 15, 16, 17, 18ஆகிய நான்கு நாட்களுக்கு சர்வோதய பயிற்சி முகாமை ஒழுங்குசெய்துசேவைசெய்ய சம்மதம் தெரிவித்த ஐம்பது இளைஞருக்கும் அறிவித்தோம். இருபது பேர் சமுக மளிப்பதாகப் பதில் அனுப்பியிருந்தனர்.

பெப்ரவரி மாதம்15ஆம் திகதிமாலை 6 மணிக்கு இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில்ஆரம்பமான சர்வோதய பயிற்சி முகாமிற்கு பதினைந்து இளைஞர் சமுகமளித்தனர்.

இவர்களின் விபரம்:

திரு. சோ. கேதீஸ்வரநாதன் யாழ்ப்பாணம்
,, மா. பெரியண்ணன் தலவாக்கொல்லை
,, எஸ். தம்பிராசா - கோப்பாய்
,, வே. நவரத்தினம் யாழ்ப்பாணம்
,, எம். கறுப்பையா - அட்டன்
,, சி. மரியதாசன் - வசாவிளான்
,, அ. மகேந்திரன் - உரும்பிராய்
,, பி. எஸ். வேலு - கொஸ்லந்தை
,, எம்.கறுப்பையாஅக்கரைப்பத்தனை
,, சா. ஐங்கரதாசன்-வாழைச்சேனை
,, ஆர். செல்வராஜா- கல்பிட்டமட
,, மு. கணபதி - கந்தப்பளை
திரு. ஆ.சிவானந்தம் - வாழைச் சேனை
,, சி. விஷ்ணுமோகன் - கொழும்பு
,, மு. கறுப்பையா - தெமோதற

முதலாவது நாள், சர்வோதய பயிற்சி முகாமின் நோக்கம் பற்றி விளக்கப்பட்டது.

16, 17 ஆம் திகதிகளில் உடலுழைப்பு, சர்வோதயபடிப்பு, சர்வோதய வகுப்பு ஆகியவை இடம் பெற்றன. ஒவ்வொரு ஊழியரோடும் காந்திசேவா சங்கத் தலைவர் முதலியார்செ. சின்னத்தம்பி அவர்கள் நேரில் கலந்துரையாடி பயிற்சிக்குத் தகுதியான பதினொரு பேரைத் தெரிவு செய்தார்.

பயிற்சி முகாமின்போது 10 மணி நேரம் உடலுழைப்பு நடைபெற்றது. கல்வி வெளியீட்டு திணைக்களத்தைச் சேர்ந்த திரு. இ. இரத்தினம், இளந்தமிழர்முன்னேற்றமன்றச் செயலாளர் திரு. தம்பு-சிவா ஆகியோர்கருத்துரை வழங்கினார்கள். முகாம் ஊழியருக்கு உணவளிக்க சர்வோதயபாத்திரஅரிசி பயன் பட்டது.

முகாம் முடிவடைந்தபோதுநடைபெற்ற கருத்தரங்கில்ஊழியருக்குகருத்துத் தெரிவிக்கச்சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. 'நாளொன்றிற்குபத்துப் பதினைந்துசிகரெட்புகைக்கும்நான் முகாம் நடைபெற்ற நாட்களில் ஏற்பட்ட கட்டுப் பாடுகாரணமாக புகைக்கும் பழக்கத்தை நக்கைவிட்டுவிட்டேன்' என ஒரு ஊழியர்கூறினர்.

''சுவையானஉணவையே உண்ணும் நான், நாவடக்கத்தின்அவசியத்தைஇம் முகாமின் போது உணர்ந்து கொண்டேன். எனது புலன்களைக் கட்டுப்படுத்தஉதவிய இம் முகாமைநான் என் வாழ்வில் ஒரு போதும் மறக்கமாட்டேன்'' என இன்னொரு ஊழியர் கூறினர்.

உடலுழைப்பின் மகத்துவத்தை உணரச் செய்த சர்வோதய பயிற்சி முகாம் இந்நாட்டு இளைஞருக்கு சிறந்த முன்மாதிரி யென மற்றோர் ஊழியர் கூறினர்.

நாங்கள் எதிர் பார்த்ததிலும் பார்க்க சர்வோதய பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்ற செய்தியை எல்லோருக்கும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

# சர்வோதய நிகேதன கட்டட நிதி

இரத்மலானை இந்துக் கல்லூரிச் சதுக்கத்திலுள்ள சர்வோதய நிகேதனத்தில் காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டுவரும் கட்டடத்திற்கு நன்கொடை அளித்த அன்பர்கள்.

| | | |
|---|---|---|
| ஏற்கனவே வசூலான தொகை | 11317 | 00 |
| திரு. இ. இரத்தினம் கலவிவீதி, கொழும்பு — 4 | 50 | 00 |
| டக்டர். எஸ். ஆனந்தராஜா வாட்பிளேஸ், கொழும்பு — 7 | 25 | 00 |
| டக்டர். என். சதாசிவம் கொழும்பு— 6 | 25 | 00 |
| திரு. எஸ். வல்லிபுரம் மேரிஸ் ரேட், கொழும்பு- 4 | 25 | 00 |
| திரு. வ. பாலசுப்பிரமணியம் ரொரிங்ரன் அவெனியூ கொழும்பு — 7 | 25 | 00 |
| திரு. எஸ். கே. கணேசன் கொச்சிக்கடை | 25 | 00 |
| திருமதி. சே. மதியாபரணம் 22, அலெக்சான்டரா பிளேஸ் கொழும்பு | 25 | 00 |
| நன்மை விரும்பி | 15 | 00 |
| திருமதி. வேலுப்பிள்ளை காலிவீதி, கொழும்பு — 4 | 10 | 00 |
| திருமதி. நவரத்தினராஜா கொழும்பு | 15 | 00 |
| திருசி. விபுலானந்தன் எட்மன்டன்ரேட்கொழும்பு | 10 | 00 |
| மதர் சுப்பீரியர், திருக்குடும்பக்கன்னியர் மடம் கொழும்பு—4 | 25 | 00 |
| மொத்தம் | 11,592 | 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வோதய நிகேதன கட்டட திறப்பு விழா

இலங்கையில் நடைபெற்ற குவேக்கர் சம்மேளனத்திற்கு வருகை தந்த இந்திய சர்வோதயத் தலைவர் ஸ்ரீஜயப் பிரகாஸ் நாராயன் அவர்கள் 1968 யூன் 16 ஆம் திகதி இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்திலுள்ள சர்வோதய நிகேதனத்திற்கு விஜயம் செய்து 50 அடி நீளம் 25 அடி அகலமான காந்தி நூற்றூண்டு ஞாபகார்த்த மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

காலத்துக்குக் காலம் சிரமதான ஊழியர் சிரமதான முகாம் அமைத்து இக்கட்டடத்தைக் கட்டி முடித்தனர் 1970 ஜனவரி 30 ஆம்திகதி காந்தியடிகள் அமரத்துவமெய்திய சர்வோதய தினத்தன்று இக்கட்டடத்தை மாண்புமிகு தாபல் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் அவர்கள் திறந்து வைத்தார்கள். கொழும்பு- இந்துக் கல்விச்சபை செயலாளர் திரு.க.சி. தங்கராசா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். பொரளை பாராளுமன்ற உறுப்பினர் சார்பாக திரு. விஜய தர்மவர்த்தன அவர்களும் தெகிவளை கல்கிசை மாநகரசபை உறுப்பினர் திரு.பி. சேனதீர அவர்களும் விழாவில் கலந்து கருத்துரை வழங்கினர்கள்.

திருமதி விஜயலட்சுமி சண்முகம் பிள்ளை தமது மாணவிகளுடன் சமுகமளித்துப் பக்திப் பாடல்கள் பாடினர்கள்.

மலைநாட்டு மாதர் சங்கத் தலைவி திருமதி. சிவபாக்கியம் குமாரவேல் அவர்கள் நூற்பு வேள்வியில் கலந்து காந்தி அடிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

வாசித்துவிட்டீர்களா
பனையும் பயனும் ரூ. 2
இனிக்கும் பதநீர் ரூ. 2
விபரங்களுக்கு-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்

## சம்பத்துத்தானம்

சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

| | | |
|---|---|---|
| திரு. செ. குமாரசாமி செனெற், கொழும்பு. | 5 | 00 |
| திருமதி. ம. குமாரசாமி 7, மல்வத்த அவென்யூ நுகேகொடை | 10 | 00 |
| திருமதி. ஈ. ஆர். செல்லத்துரை கொழும்பு | 20 | 00 |
| திரு. சி. வன்னித்தம்பி தெமட்டகொட பிளேஸ் கொழும்பு — 9 | 5 | 00 |

## செய்திகள்

பம்பலப்பிட்டி - இந்துக்கல்லூரி சர்வோதய பாத்திர இயக்கம் மூலம் ஜனவரி மாதம் 50 கொத்து அரிசியும் 3 ரூபா 09 சதமும் கிடைத்துள்ளது.

★ ★ ★

சர்வோதய பாத்திர இயக்கம் மூலம் 104 வீடுகளிலிருந்து 117 கொத்து அரிசியும் 11 ரூபா 95 சதமும் கிடைத்துள்ளது.

★ ★ ★

இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்தில அமைந்துள்ள சர்வோதய நிகேதன காந்தி நூற்றூண்டு ஞாபகார்த்த மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கு ஆயிரம் உழியர் வரை சிரமதானத்தி லீடுபட்டனர்.

கட்டடத்திற்கு 10,977 ரூபா 11 சதம் செலவிடப்பட்டுள்ளது.

காந்தீய-சர்வோதய
தத்துவங்களை அறிவதற்கு
கிராமராஜ்யம், சர்வோதயம்
ஆகியபத்திரிகைகளை படியுங்கள்
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

## வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [ 1971 ஜனவரி ] வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 913 | 52 |
| சர்வோதயபாத்திரம் | 9 | 11 |
| சம்பத்துத்தானம் | 47 | 00 |
| விடுதிக்கட்டணம் | 90 | 0 |
| காந்தீயம் | 30 | 00 |
| கட்டடம் | 4451 | 00 |
| அரிசி | 12 | 00 |
| மொத்தம் | 5552 | 63 |
| செலவு | | |
| உணவு | 224 | 50 |
| பிரயாணம் | 57 | 90 |
| தபால் | 33 | 00 |
| சலூன் | 1 | 85 |
| மாணவர்செலவு | 28 | 72 |
| சர்வோதய அச்சகம் | 12 | 00 |
| நாணவிதம் | | 15 |
| கோகுலம் | 21 | 00 |
| கட்டடம் | 3538 | 89 |
| காந்தீயம் | 25 | 00 |
| கமம் | 2 | 00 |
| சம்பளம்—கைச்செலவு | 5 | 00 |
| வெளிச்சம் | 100 | 25 |
| ஏற்ற-இறக்க | 18 | 50 |
| உபகரணம் | 14 | 00 |
| சிரமதானம் | 73 | 12 |
| எழுத்து உபகரணம் | 8 | 50 |
| தேனீ வளர்ப்பு | 16 | 00 |
| அச்சகக் கட தாசி | 4 | 00 |
| விழாச்செலவு | 5 | 00 |
| கையிருப்பு | 1363 | 25 |
| மொத்தம் | 5552 | 63 |

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்திசேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்புமெய்கண்டான் அச்சக லிமிடெட்டில்அச்சிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org